செ.வெ. எண்: 745

11.9.08

# செய்திவெளியீடு

மாமல்லபுரம் அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக்கல்லூரியில் மரபு கட்டடக்கலை, மரபு சிற்பக்கலையில் சுதைச்சிற்பம், கற்சிற்பம், உலோகச்சிற்பம், மரச்சிற்பம் ஆகிய துறைகளிலும், மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலை ஆகிய துறைகளில் 4 ஆண்டு பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன. இதற்கான மாணவர் சேர்க்கை தற்பொழுது நடைபெறுகின்றன. +2 தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இப்படிப்புகளில் சேர விபரங்களுக்கு 044-27442261 என்ற தொலை பேசி மூலம் தகவல் பெறலாம். இக்கல்லூரியிலிருந்து சேர்க்கை விண்ணப்ப படிவம் பெற்று பூர்த்தி செய்து கொடுத்து கல்லூரியில் சேரலாம் என கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.

அகவை வரம்பு 01.07.2008 அன்று 21 அகவை முடிக்கப் பெறாதவர் ஒன்றுக்கு மேற்பட்ட பாடப்பிரிவுக்கும் விண்ணப்பிக்க ஒரே விண்ணப்பம் போதுமானதாகும்.

விண்ணப்பக்கட்டணம் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினருக்கு ரூ.50/-
பிறவகுப்பினருக்கு ரூ. 100/-

விண்ணப்பக்கட்டணம் State Bank of India திருக்கழுக்குன்றத்தில் மட்டும் மாற்றத்தக்கவகையில் முதல்வர் பெயருக்கு வங்கி வரைவோலை மூலம் நேரில் அல்லது ரூ.10/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டதன் முகவரியிட்ட உறையினை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நிறைவு செய்த விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 30.09.2008என அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக்கல்லூரி மாமல்லபுரம் முதல்வர் அறிவிக்கிறார்.

முதல்வர்
அரசு கட்டடக்கலை சிற்பக்கலைக்கல்லூரி,
மாமல்லபுரம் 603 104
தொ.பேசி - 27442261

10/9/08

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9